சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "அனைத்து மாவட்ட மைய நூலகங்களை நவீன மயமாக்குதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.140 நாள் 13.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆனி–29

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநர் தங்கள் கடித ந.க எண்.5763/உ3/2018, நாள் 06.06.2018 மற்றும் 20.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

" மாவட்ட மைய நூலகங்களுக்கு வருகை தரும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சென்னையில் உள்ள நூலகங்களில் நடைபெறும் கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள், புகழ்பெற்ற எழுத்தாளர்கள், துறை வல்லுநர்களின் கருத்துரைகள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப Smart TV (அல்லது) LED Projector வசதி அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.32 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.''

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திட, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொடர்ந்து வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பல்வேறு துறைகளின் ஆளுமைகளால் நடத்தப்படும் பொன்மாலைப் பொழுது நிகழ்ச்சியில், அறிவார்ந்த கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள் போட்டித் தேர்வுக்கான பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் துறை வல்லுநர்கள் மூலம் நடத்தப்படும் வகுப்புகள், விரிவுரைகள் மற்றும் தமிழ்நாட்டில் வரலாற்று சிறப்புமிக்க நூலகமாக திகழும் கன்னிமாரா பொது நூலகத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் குழந்தைகளுக்கான பயிற்சி மற்றும் பிற நிகழ்ச்சிகள் போன்ற பல்வகையான செயல்பாடுகளை மாவட்டந்தோறும் தலைநகரங்களில் செயல்படும் மாவட்ட மைய நூலகத்தில் உடனுக்குடன் நேரிடையாக ஒளிபரப்பு செய்யப்பட்டால் அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர்கள் மற்றும் வாசகர்கள் மிகுந்த பயனடைவர் என்கிற உயர்ந்த நோக்கத்துடன் 32 மாவட்டங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களுக்கும் Smart TV வழங்குவது மிகவும் அவசியமாகும் என்பதால், எல்காட் நிறுவனத்தின் மூலம், 32 மாவட்ட மைய நூலக பயன்பாட்டிற்கு Smart TV வாங்க ஒரு மைய நூலகத்திற்கு ரூ.99,525/– வீதம் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு செலவினம் ரூ.31,84,800/–ஐ (ரூபாய் முப்பத்தோறு இலட்சத்து

(த.பி.பா.)

எண்பத்து நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டின் அறிவிப்பான "அனைத்து மாவட்ட மைய நூலகங்களை நவீன மயமாக்குதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, அனைத்து மாவட்ட மைய நூலக உறுப்பினர்கள் / வாசகர்கள் நலன் கருதி 32 மாவட்ட மைய நூலக பயன்பாட்டிற்குத் தேவையின் அடிப்படையில், எல்காட் நிறுவனத்தின் மூலம், Smart TV வாங்குவதற்கு ஒரு மைய நூலகத்திற்கு ரூ.99,525/– வீதம் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு செலவினம் ரூ.31,84,800/–ஐ (ரூபாய் முப்பத்தோறு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2224/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 27.06.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.

<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மு. செந்தமிழ்செல்வி
பிரிவு அலுவலர்.
13/7/18